# காந்தி ஜெயந்தி விழா

உரை:

# காந்திஜியும் நாட்டு விடுதலையும்






**முள்ளஞ்சேரி மு.வேலையன் M.A,M.Phil**
மார்த்தாண்டம் இலக்கியப்பேரவை

முளங்குழிஅஞ்சல்

குமரிமாவட்டம்-629162

9942758333

நாள்: அக்டோபர் -2, 2008

இடம் : கருங்கல் பெத்லகேம் கல்வியியல் கல்லூரி

## காந்தியும் நாட்டு விடுதலையும்

### முன்னுரை

வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம். தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீவாழ்க! வாழ்க!என்று பாட்டிற்கோர் புலவன் பாரதி பாடினான்.

முத்துப்பல்லாக்கும் முகம் ஜொலிக்க வைரக்கிரீடமும், ஆனந்த மயமான அரண்மனையும், கொஞ்சி விளையாட அரம்பையரும், தங்கத்தட்டுகளில் பரிமாறும் உணவும், பச்சைப் பசேலன்ற பூங்கா வனங்களும், நோய்க்கு மருந்தும், வாய் மணக்க பண்ணும், பூமியில் பாதம் படாது; பச்சை நிறக் கம்பளங்களும், நடந்து. உலாவி. மகிழ்ந்து மக்கள் மாண்புடன் வாழ்ந்தார்கள் என்றால் பொய்புனைந்தோரின், புறம் கூறுவோரின் புலம்பல்.

இந்த ஏகபோகம் எல்லாம் சிலருக்கு வாய்த்தவைகள் பலருக்கு வழங்க மறுத்த கால்வயிற்றுக் கஞ்சியும், ஒதுங்கிக்கொள்ள கூரையும், நோய்பட்டால் செத்து ஓதுக்குப்புறமாய் தள்ளும் வாழ்க்கையும் தான் மிஞ்சியிருந்தது. ஆண்டாண்டு காலமாய் வல்லான் வாழ்வதற்கு வலிமை கொண்டு எளியோரை ஒழித்தே வாழ்ந்தனர்.

குறுநில மன்னர்களும் , குற்றேவல் புரிபவர்களும் , குள்ளநரிபறித்தே ஆண்டு அனுபவித்தனர். அதிகார மமதை கொண்டவர்கள் அடியாளாய் , அடிமைகளாய் மட்டுமே மக்களை நடத்தினர். நாட்டுக்கு நாடு, நிலத்துக்கு நிலம் , சண்டையிட்டே சமாதியாயினர். பிணக்குகள் போட்டிகள் சாதகமாயின. நாநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அன்னியன் வந்து அலங்கோலங்களை அறிந்து மூலதனமாக்கிக் கொண்டான். இந்த தேசத்தில் வேற்றுமை கொண்டவர்களை இனம் பிரித்து ஏற்றம் கொண்டான். காடுமுதல் கழனிவரை; கனிவளம் முதல் கனிமவளம் வரை சுரண்டுவதற்கு வாய்ப்பு என கருதினான். அதற்கு அவன் கற்ற கல்வியும், தொழில் நுட்பமும் சாதகமாயின. அடக்கி அடிமைபடுத்தி ஆட்சிமுறை நிர்வாகம் எல்லாம்

அமைத்து அடித்தளம் அமைத்துக்கொண்டான். ஆண்டவர்கள் அனைவரையும் கையகப்படுத்திக் கொண்டான். எதிர்த்தவர்களை மாண்டவர்கள் ஆக்கினான். தனக்கு வசதிக்காக சாலைகள் போக்குவரத்து தொலைத்தொடர்பு தொழில் கூடம் அனைத்தையும் ஏற்படுத்தி. கொண்டதே கோலம் என குதூகலம் கொண்டான். தனித்து நின்று எதித்தவர்கள் புலித்தேவன், கட்டபொம்மன், ஜாண்சிராணி, திப்பு சுல்தான் , மருதுசகோதரர்கள் இவர்கள் எல்லாம் மண்டியிடாமல் வீரமரணம் கொண்டார்கள்.

**காங்கிரஸ்**

1885 காங்கிரஸ் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கங்கள் ஆங்கிலேயனிடம் கேட்டுப்பெறுவதுதான். ஆங்கிலேயன் ஒருவனால் மக்களிடம் இரக்கம் கொண்டு ஏற்படுத்தும் அமைப்பு சமூக நலனாகத்தான் இருக்கமுடியும்; உரிமையாக இருக்கமுடியாது. இந்தியத் தலைவர்கள் பலர் அங்கத்தினரானார்கள். கோரிக்கைகள் வேடிக்கையானதுதான் வாடிக்கை. வழிதெரியாமல் தவித்தனர் மக்கள். அடிமை சாசனம் செய்யப்பட்டவர்கள் விதினென்றுதான் நொந்தனர். கிளர்ந்தவர்களை முளையிலே கிள்ளி எறியப்பட்டனர். மிதவாதிகள் தீவிரவாதிகள் என்ற பிளவும் காங்கிரசில் ஏற்பட்டன. மிதவாதிகள் போதித்ரார்கள் தீவிரவாதிகள் மறைந்து வாழ்ந்து சாதிக்கப்பார்த்தார்கள். சுட்டெரிக்கும் சூரியன் முன்னால் இரண்டுமே சாம்பல்தான் மக்களில் பலர் விதியின் ஓலம். சிலர் அண்டி வாழ்ந்து ஏற்றம் பெற்றனர். வாய்ப்புகள் வசதிகள் பெற்றனர். இவர்களும் கையில் கிடைத்தவர்களையெல்லாம் அடிமைப்படுத்தினர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சொந்த மண்ணிலும் நாதியில்லை அன்னியனாலும் பாதுகாப்பு இல்லை. இடம் பெயர்ந்தவர்களும் நாதியற்ற அடிமையாயினர். சொந்த மண்ணிலும் உரிமையற்ற சேவகர்கள் ஆயினர்.

**தென்னாப்பிரிக்கா**

இந்த நேரத்தில்தான் யுகப்புரட்சிக்கு ஓர் மனிதன் உதித்து வருகின்றான். கையில் ஆயுதம் இல்லை. போர்பரணி பாட படைகள் இல்லை. வாழ்க்கைப் பயணத்துக்காய் தொழில் செய்வதற்கு தென்னாப்பிரிக்கா செல்கிறான்

மோகன்தாஸ் கரம் சந்த்காந்தி. கோட்டு சூட்போட்ட பாரிஸ்டர் பயின்ற காந்திக்கு தென்னாப்பிரிக்காவில் கிடைத்த அவமரியாதைதான் விடுதலை வேட்கையின் அடித்தளம்.

1893 ஏப்ரல் இறுதியில் தென்னாப்பிரிக்கா வின் 'நேட்டால்' போய் சேர்ந்த இந்தியக்கருப்பன். முதல் வகுப்பில் பயணம் செய்வதை வெள்ளை ரயில்வே அதிகாரிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. காந்தியின் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளினார்கள் உடைமைகளையும் எடுத்து வீசினார்கள்.

**நிறவெறி**

நிறவெறியால் தனக்கு ஏற்பட்ட அவலம்போல் பன்னெடுங்காலமாய் இங்கு வாழும் இந்தியர்களும் இப்படித்தான் அனுபவிக்கிறார்கள் என்பதை உணர்ந்து. அடிமையாய் வாழும் மக்களுக்காய் களம் அமைத்து 'நேட்டால் இந்தியக் காங்கிரஸ்' என்ற அமைப்பினை உருவாக்கிப்போராடியவர். தனக்கு ஏற்பட்ட துன்பம் தன்நாட்டிற்கு இழைத்த தீங்காய் உணர்ந்தால்தான் மக்களின் உணர்வுகளோடு கலந்தார் காந்தி.

இந்தியன் ஒப்பீனியன் என்ற இதழ், சர்வ சமய இலக்கியங்கள் ஆன்றோர் வகுத்த நீதி நுல்கள் காந்தியை மக்கள் தலைவனாய் தயார்படுத்தின.

**சத்தியாகிரகம்**

சத்தியாகிரகம்தான் பலம் பொருந்திய ஆதிக்கத்தை எதிர்க்கும் ஆயுதம் என உணர்ந்த காந்திஜி சத்யாகிரகிகளை உருவாக்கும் வண்ணம் 'போனிக்ஸ் குடியிருப்பு' என்ற பண்ணையை அமைத்து காந்தியும் மற்றோரும் உற்றார் போல் குடியிருந்து; சர்வோதயம் என்ற சொல்லுக்கு ஏற்ப எல்லோர் நலனிலும் அக்கரை கொண்டார்கள் . உழைப்பின் மூலம் வாழ்க்கை நடத்துதல் எண்ணத்தாலும் சொல்லாலும் தீங்கு செய்யாமல் சத்யவழியில் நடத்தல், அகிம்சையைக் கடைபிடித்து சத்தியத்திற்கான வழியை அடைதல், நாவடக்கம் பேணுதல், பிரம்மச்சாரியம் பேணுதல், அஞ்சாமை கொள்ளுதல் , உடமைகள் வைத்துக் கொள்ளாமலும் பிறர் உடைமைகளை

திருடாமையும் , அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நலனில் அக்கறை கொண்ட சுதேசியாக, சர்வசமயசமரசம் கொண்டு தீண்டாமைப்பேய் பிடியாதவர்களாக வாழும் சத்யாகிரகிகளை உருவாக்கினார். தானும் பயிற்சி பெற்றார். அதனால் தென்னாப்பிரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஜ் என்ற வெள்ளை ஆதிக்க பிரதிநிதியின் 'கறுப்புச் சட்டத்தை' எதிர்த்து மக்களை விடுவித்த மகான் காந்தி எட்டாண்டு காலம் எழுச்சியாக நடத்திய பயிற்சிப் போராட்டம் இந்திய விடுதலைப் போருக்கு வித்திட்டது.

**விடுதலை வேள்வி**

காந்தியை கண்ணுற்று காத்திருந்தனர் இந்தியத் தலைவர்கள் கொழுந்து விட்டெறியும் விடுதலை வேள்வியைக் கட்டிக் காத்தவர் கோகலே.

காந்தியின் போர்முறையாக பிடித்துப்போனது. காந்தியை தேசமெங்கும் சென்று மக்கள் வாழ்க்கையை பார்த்துவரப் பணித்தார். அகமதாபாத் சபர்மதி ஆற்றங்கரையில் சபர்மதி ஆசிரமம் அமைத்து சத்யாகிரகிகளை உருவாக்கினார். தேசமெங்கும் பயணித்த காந்தி மதுரை விவசாயின் கோலம் தனது அடையாள மாகியது. கோட்டு சூட்டு அணிந்த காந்தி ஏகாதிபத்தியத்தின் அதிபதி சர்ச்சில் கூறியதுபோல் 'அரை நிர்வாணப் பக்கிரி' வேடம் விடுதலை வீரனின் அடையாளமாக மாறியது.

1918 வரை தனித்தே நின்ற காந்தியை கொஞ்சம் கொஞ்சமாக பதவிகள் வகிக்காமலே காங்கிரஸ் உள்வாங்கியது அவுரித்தொழிலாழர்களுக்கு இழைத்த அனீதியும் அதற்கெதிரானபோரும். மக்களுக்கு பலனும் வாழ்க்கை முறையும் கிடைக்க வழி கிடைத்தது. ஆலைத்தொழிலாளர்கள் மிரட்டல்கள் பிரச்சினை போன்று எல்லார் அவலங்களையும் இடி முழக்கங்களையும் அகிம்சை வழியில் தீர்க்கும் வல்லவரானார்.

உழவர்களுக்கு இழைத்த இன்னல்களை எளிதில் தீர்த்து ஏழைகளுக்கு இனியவரானார்.

## உலகப்போர்

உலகப்போர் நடைபெற்றபோது பரிட்டீஸ் அரசின் போர் முடிவுகளுக்கு ஆதரவு காட்டவிரும்பினார். எதிரியே ஆனாலும் சிக்கலில் சிக்கி இருக்கும் போது இறுக்கி விடநினைக்கும் இதயமற்றவராக இல்லை. போர் முடிந்தது இந்தியா தன்னுரிமை பெற்றுவிடும் என்று நம்பினார். வெற்றிகண்டதும் வெற்று வாக்குறுதியாக்கியது வெள்ளை அரசு.'ரௌலட்' என்ற கொடிய சட்டத்தை கொண்டுவந்து மக்களை கொன்று குவிக்க நினைத்தது.

## பொதுவேலை நிறுத்தம்

நாடுமுழுவதும் பொதுவேலை நிறுத்தம் செய்து உண்ணாநோன்பிருந்து வழிபாடுசெய்யவேண்டும் என்பது அண்ணல் வகுத்த வழி. இது சென்னையில் ராஜாஜி வீட்டில் உதயமாகியது. 1919 மார்ச் 30 என்றும் பின்னர் ஏப்ரல் 6 என்றும் அறிவித்தனர். டில்லியில் மார்ச் 30 இல் பொது வேலை நிறுத்தம். ஆத்திரம் தீருமட்டும் அடித்தும் நொறுக்கியும் ஆவேசம் தணித்தது அரசு. பம்பாயில் ஏப்ரல் 6 இல் காந்தி தலைமையில் நடந்தது.பஞ்சாபிலும் அடக்குமுறை தாண்டவமாடியது. ஜெனரல் டயர் 1650 தடவைகள் சுட்டு கோரத்தாண்டவமாடினான். வரலாற்றில் பெரும் வடுவை ஏற்படுத்தினான். இறந்தோரும், குற்றுயிரானோரும் கணக்கிடுவதில் தடுமாற்றம் அப்படியொரு கோரத்தாண்டவம்.

## ஒத்துழையாமை

துருக்கியில் உள்ள சுல்தானின் கலீபா பதவியை பறித்தது பிரிட்டீஸ் அரசு. இஸ்லாமியர் வேண்டுகோளுக்கு இணங்க வெகுண்டெழுந்த காந்தி ஒத்துழையாமை என்னும் புதிய திட்டத்தை அறிவித்தார்.

1920 செப்டம்பரில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் சிறப்புக்கூட்டத்தில் முஸ்லீம்களுக்கு கை கொடுக்க காந்தியை முதன்மைப்படுத்தியது. காங்கிரஸில் தானைத்தலைவனாய் விளங்கிய காந்தியின் சொல் மற்றவர்களைக் கவ்வியது. கல்விக்கூடங்கள், வழக்குமன்றங்கள் அயல்நாட்டுத்துணி புறக்கணித்தல்,தொடங்கி கௌரவப்பட்டங்கள் வரைத்தூக்கி எறியத் தொடங்கினர். ஒத்துழையாமை என்ற போர்பரணி

இராணுவப்படைகள் வரைப் புகுந்தன. மறியல், முற்றுகை, நடைப்பயணம் ,உண்ணாநோன்பு, சத்யாகிரகத்தின் வடிவங்களாயின. சமூக ஒற்றுமை, தீண்டாமை நீக்கம், கதர் , சுதேசி, கிராமத்தொழில் வளர்ச்சி, கிராமப்பொருளாதாரம் , தேசியக்கல்வி, மதுவிலக்கு போன்ற நிர்மாணத்திட்டங்களும் உருவாயின.

நியாயமான அமைதியான வழியே இந்திய விடுதலைக்கு உகந்தது என்று 1920 டிசம்பரில் நாகப்புரில் கூடிய மாநாடு முழுமனதாக காந்தியின் திட்டத்தை ஏற்றது.

காந்தியின் விடுதலைப்போரில் மக்கள் வாழ்வியல் ஆதாரம் அடங்கி இருந்தது. முழுமையான மக்களும் விரும்பாது கிடைக்கும் சுதந்திரம் சிறப்பாக இருக்காது. பயத்தினால் விட்டு செல்பவனிடம் இருந்து பெறுபவர்களும் வாட்டி வதைத்து விடுவார்கள். என்பது காந்தியின் தீர்க்க தரிசனம்.

எல்லா மக்களுக்கும் சுதந்திர தாகம் ஊட்டவேண்டும் அடிமை நிலையில், பல்வேறு நம்பிக்கைகளில் முடங்கிக்கிடக்கும் மக்கள் எழுச்சி பெறவேண்டும் என்றால் அவர்களுக்கு அடிப்படைக் கல்வி கொடுக்கவேண்டும் அதற்கான பணியை செய்தார்.

**கதர் இயக்கம்**

சோம்பலுற்று முடங்கிக் கிடக்கும் மக்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக உழைக்கவேண்டும். அதற்கு ராட்டை வழங்கி நூல்நூற்கவும், ஆடைநெய்யவும் செய்யவைத்தார். இதனால் கதர் இயக்கம் போராட்ட இயக்கமாகியது. அன்னிய துணி மறுப்பு என்ற ஒப்பற்ற சிந்தனை மக்களை போராட்ட உணர்வையும் நடுவீதியில் அன்னிய துணிகளை கொழுத்துகின்ற போர் விடுதலைப் போராக மாறியது.

**உப்பு சத்யாகிரகம்**

உப்பு எடுப்பது ஒரு போரா என்றவர்கள் வாயடைத்து நிற்க வரலாற்றில் எவரும் செய்யாத புதுமையாக உப்பு சத்யாகிரகம் அமைந்தது. கடற்கரை பகுதி எங்கும் உப்பு எடுக்கும் பயணம் நிகழ்ந்தது. சபர்மதி

முதல் தண்டிவரை செய்த பயணம் வரலாற்று முக்கியத்துவமாக இன்னும் விளங்குகிறது.

**மதுவென்னும் தீமை**

மதுவென்னும் தீமையால் மக்கள் மடிகிறார்கள் குடும்பம் சீர்கெடுகிறது இதனால் மதுவிலக்கு இயக்கம். கள்ளுக்கடை மறியல் போர் பெண்களை சபதமேற்று களமிறக்கியது. ஒத்துழையாமை போரில் வன்முறைகள் எழாமல் அடிக்கும் அடியெல்லாம் இடிதாங்கி போல் தாங்கும் மனஉறுதியை அகிம்சை எடுத்துக் கொடுத்தது. பல்முனைப்போர் பாரதம் எங்கும் வெடித்துச் சிதறியதால் கட்டிக்காக்க முடியாமல் போர்நிறுத்த முழக்கம் பலருக்குக்குழப்பமாயின.உண்ணா நோன்பிருந்து வழி நடத்தியவர் தான் அண்ணல் காந்தி.

ஆறுகோடிக்கு நிகரான கதராடையை மக்கள் செய்து விடுவார்களானால் ஓராண்டில் விடுதலை பெற்று விடும் என்று நம்பிக்கை ஏற்படுத்தினார் 35 கோடி மக்களும் ஒத்துழைக்காமலிருந்தால் இந்தியா விடுதலை பெற்று விடும் என்பது காந்தியின் அசைக்கமுடியகத நம்பிக்கை.

ஓர் ஆண்டில் விடுதலை என்ற ஒப்பற்ற வாக்கினால் பல நுற்றாண்டுகளாக மக்களிடம் முடியாது என்ற மூடத்தனம் முறியடிக்கப்பட்டது. இந்த நேரத்தில் ‘யங்இந்தியா’ இதழ் மூலம் மக்களுக்காய் எழுதித்தள்ளினார்.

1921 ஏப்ரல் இரண்டில் வைஸ்ராய்ங்ராய் ரீடிங்பிரபு காந்தி அடிகளை சந்திக்க அழைப்புவிடுத்தார் பலன் ஏதும் கிடடவில்லை என்றாலும் அவர்கள் விரித்த வலையில் யாரும் சிக்கவில்லை.

1921 நவம்பர் 17 இல் பம்பாய் வந்த இளவரசர் எ்ட்வர்டை வரவேற்கலாகாது என காங்கிரஸ் தீர்மானித்து வெற்றியும் கண்டது. இதில் வெதும்பிப்போன வெள்ளையர்கள் நேரு உட்பட பெரிய தலைவர்கள் என முப்பதினாயிரம் பேர் சிறைப்படுத்தினர்.

**காந்தியின் நோக்கம்**

குஜராத் மாநிலத்தில் பர்தோலியில் சத்யாகிரக நாள்களுக்கு முன்னர் ‘செளரி செளரா’என்ற இடத்தில் ஊர்வலம் சென்றவர்களுக்கும் காவலர்களுக்கும் கை கலப்பு ஏற்பட்டது. துப்பாக்கிசூடு நடந்தது. ஆத்திரம் அடைந்த மக்கள் காவல் நிலையத்தை தீக்கி இரையாக்கினர் 22 காவலர்கள் கொல்லப்பட்டனர் .சத்யாகிரகம் செய்யும் பக்குவத்தை மக்கள் பெறவில்லையென பர்தோலிசத்யாகிரகத்தை நிறுத்தி வைத்தார்காந்தி. சிலர் காந்தி மேல் குறைபட்டுக்கொண்டனர். வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழியை உடைத்து விட்டார் என்று காந்தியின் மேல் ஆத்திரம் கொண்டனர். காந்தியின் நோக்கம் யாதென தலைவர்களும் உணரவில்லை மக்களும் உணரவில்லை. இந்தச் செயலின் வீம்பில் அப்பாவி மக்கள் மேல் ஆத்திரம் கொண்டு அரசு இயந்திரம் அப்பாவி மக்களை நசுக்கி விட்டால் இழப்பை எவ்வாறு ஈடு செய்யமுடியும் என்பது காந்தியின் தீர்க்க தரிசனம். இருந்தும் அரசுவிரோத கட்டுரை எழுதியதாக குற்றம் சாட்டி கைது செய்தது அரசு. வழக்கு மன்றத்தில் சி.என. ப்ரும்பீல்டு நீதிபதி காந்திஜிக்கு எழும்பி மரியாதை செலுத்தினர். அடிகள் அரசின் அடக்குமுறைகளை தெரிவித்து விட்டு நடந்து முடிந்தவைகளுக்கு தாமே பொறுப்பு. நீதிபதி தரும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன் என்று வழக்குரைத்தார். அதிர்ச்சியில் உறைந்து நின்ற நீதிபதி 6 ஆண்டுகள் தண்டனை வழங்கினார். தண்டனையைக் குறைக்கவோ விடுதலை செய்யவோ இந்தியாவில் ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அப்போது மிகுந்த மகிழ்ச்சி அடைபவர் தம்மைத்தவிர எவரும் இலர் என்றார் நீதிபதி.

போராட்ட அமைப்புகளால் மக்களில் இருந்த வேற்றுமைகள் கரையத்தெபடங்கின. சம்பிரதாயத்துக்கேனும் கௌரவத்துக்கேனும் ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னால் உறவாடக்கூடிய சமூக அமைப்பு உருவாகியது. அனுதாபங்கள் மூலமாகவும் அரவணைத்துக் கொண்டார்கள்.

**தீண்டாமை**

தீண்டாமையைக் காந்திஜி எந்த வகையிலும் ‘காம்பர்மைஸ்’ செய்துகொள்ள உடன்பட்டவராயில்லை ஆசிரமங்களில்

தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும். சத்தியாகிரகிகளுக்கு பணிசெய்வதில் கஸ்துரிபாய் மறுத்தபோதும் அவரை வெளியேற்றும் முடிவுக்கு வந்தார்.

ஹரிஜன் சேவாஅமைப்பு ஏற்படுத்தி உயர்வர்கமாக கருதப்படுவோரை பொறுப்புக்களில் அமர்த்தி சேரியெங்கும் சுத்தம் செய்ய செய்து பாவங்களிலிருந்து விடுதலை தேடவைத்தார்.

சிசுக்கொலையென்னும் பாதகத்தை உணரவைத்து மக்கள் மனதில் மாறா நேயத்தை வளர்த்துதெடுத்தார். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைகளை மண்ணோடு மண்ணாக மாற்ற மங்கையரின் மனதில் புதைந்திருந் அடிமைத் தனத்திற்கு விடுதலை கொண்டு வந்தார்.

சிறைச்சாலை அறிவுச்சாலையாயிற்று கொடுமை பல கொடுங்கோலர்கள் செய்தாலும் கொள்கை மறவர்களாய் வென்றெடுக்கும் வித்தையை விதைத்து வைத்தார் காந்தி. ஆகாகான் சிறையில் கண் ணயராது விழித்திருந்து தேசவிடுதலை வீரனுக்காய் பணிவினை செய்யும் துணைவி கஸ்துரிபாய் இறந்தபோதும். எண்ணியதை ஏற்றமுடன் செய்துமுடிக்கும் உதவியாளர் மகாதேவ்தேசாய் இறந்தபோதும். அடுத்து நமக்கு சிறைச்சாவு வந்தாலும் கவலையுறாமல் உண்ணாநோன்பிருந்து உலகத்தை உய்விக்க உயிர்விட துணிந்தார். உத்தமர் காந்தி என்னும் ஓர் உயிர் போய்விட்டால் சூரியன் கீழ் தமதாட்சி என்று மமதையுடன் ஆட்சி செய்த வெறியர் கூட்டத்தை உலகம் விழித்தெழுந்து உதைத்துத் தள்ளி விடும் என்ற பயம் எழுந்ததினால் பாதுகாத்தார்கள் பாதகர்கள்.

**வட்ட மேஜை மாநாடு**

முதல் வட்ட மேஜை மாநாட்டிற்குப் பின் உப்புச் சத்தியாகிரகம் சூடுபிடித்து ஒத்துழையாமை இயக்கம் வலுப்பெற்றது காந்தி-இர்வின் ஒப்பந்தம் காங்கிரஸ்க்கு சில சாதகங்கள் இருந்தாலும் அடுத்து வந்த வெலிங்டன் ஒப்பந்தத்திற்கு மாறாக மக்களை ஒடுக்குவதிலயே மும்மரம் காட்டினார்

2-வது வட்டமேஜை மாநட்டிற்கு காந்தியை அனுப்புவது என காங்கிரஸ் முடிவு செய்தது.

வட்ட மேஜை மாநாட்டில் வைரக்கோலத்தில் ஜொலித்த ராஜபுத்திரர்கள், வெள்ளை ஆதிக்க வெறியர்களின் பிரதிநிதிகள், இந்திய நாட்டின் ஏகோபித்ததலைவன் ஏழைப்பண்டாரம் வேடத்தில் சென்றபோது. அத்தனைக்கண்களும் உற்று நோக்கினவாம். அவர்கள் இறுமாப்பில் இருந்தபோதும் சரணடையாமல் உண்மை எடுத்து உரைத்தார்.விரும்பி வேண்டி ஐரோப்பிய ஆட்சியாளர்கள் காந்தி என்னும் அகிம்சைத்துறவியைக்காண ஆவல் கொண்டனர்.

வீம்புகள் மிஞ்சி இங்குள்ள தலைவர்களை அடக்கியும் சிறை வாசம் செய்தும் இம்சித்துப்பார்த்தார்கள்.

காந்தியடிகளை ஜனரி ஒன்று 1932 இல் கைது செய்தது அரசு; பல்வேறு குற்றங்கள் சுமத்தி 32,000 பேர் சிறைக்கோட்டத்தில் அடைக்கப்பட்டனர் காங்கிரஸ் சட்டவிரோதமான இயக்கம் என அறிவிக்கப்பட்டது, வங்கிக் கணக்கு முடக்கப்பட்டது. உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டது. ஒடுக்கப்பட்டவர்களும் உயர்சாதிகளும் இணைந்து வரும் வேளையில் அவர்களுக்குள் வேறுபாட்டை ஏற்படுத்த முனைந்தது அரசு. அவர்கள் நலன் காக்க சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து அவர்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுத்தார் காந்தி.

1935 சட்டத்தின் படி தேர்தலை சந்திக்க காங்கிரஸ் முன்வந்தது 1937 பிப்ரவரி மாதத்தில் பல மாநிலங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியது.மது விலக்கு, ஆதாரக் கல்வி, ஆலயப்பிரவேசம் , ஜமீன்தாரி ஒழிப்புமுறை ஆகிய சட்டங்களை அமைச்சரவை நிறைவேற்றியது.

**இரண்டாவது உலகப்போர்**

இரண்டாவது உலகப்போரில் இந்தியரை கலந்து ஆலோசிக்காமலே இந்தியாவை போரில் ஈடுபடுத்திய செயலை காங்கிரசும் தலைவர்களும் கண்டித்தனர்.1939 செப்டம்பர் 14 இல் காங்கிரஸ் செயற்குழு கூடி இந்தியாவின் விடுதலையை போர் முடிந்த பின் அறிவிக்குமாயின் போரில் கலந்து கொள்வதாக அறிவித்தது.

காந்தி நிபந்தனை அற்ற ஆதரவு கொடுப்பதையே விரும்பினர் இருந்தாலும் காங்கிரஸ் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கினார்.

இந்தியர் எழுச்சியும் போரின் போக்கும் சர்ச்சிலை சிந்திக்க வைத்தது. 1942 மார்ச் 22 கிரிப்ஸ் தலைமையில் தூதுக்குழுவை அனுப்பினார் சர்ச்சில். கிரிப்ஸ் தூதுக்குழுவின் வருகையால் பிரிவினை வாதமே வலுப்பெற்றது கற்பனைத் தோற்றமாக இருந்த பாகிஸ்தான் பிரிவினை அமைப்பு 1942 முதல் வலுப்பெற்றது.

கொடிய ஆட்சி கொடி கட்டி பறந்தது, விலை வாசி விண்ணைத் தொட்டது, தீய சக்திகள் வெறியாடடம் , இந்த இழிநிலைக்கு விடிவு காண இந்தியா முழுமைர்ன விடுதலை பெறுவதே ஓரே வழி என்ற முடிவுக்கு வந்தார் காந்தி.

**வெள்ளையனே வெளியேறு**

1942 ஆகஸட் பம்பாயில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் 'வெள்ளையனே வெளியேறு' என்றது. வைஸ்ராய்யை சந்தித்து காங்கிரஸ்சின் தீர்மானத்தை ஏற்க வேண்டுவது என்பணி அதுவரை நீங்கள் இராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருங்கள். நிர்மாணத் திட்டப் பணிகளில் ஈடுபடுங்கள் இந்த நேரத்திலிருந்தே நீங்கள் உங்களைச் சுதந்திரமனிதர்களாகக் கருதிக் கொள்ளுங்கள். தலைவர்கள் கைதானால் ஒவ்வொருவரும் தலைவனாகி 'செய் அல்லது செத்துமடி' என்பதைப்பற்றி நின்று போராட வேண்டும். வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தை செயல்படுத்தும் வேளையில் அகிம்சை என்னும் கட்டமைப்பிலிருந்து கடுகளவும் பிறழக்கூடாது. நாங்கள் சுதந்திரம் அடைவதற்காக அயராது உழைப்போம் அதற்காக எங்கள் இன்னுயிரைக் கொடுக்கவும் தயங்கமாட்டோம் என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் என எழுச்சியுரை யாற்றினார். கிளர்ந்து எழுந்தார்.கொட்டினார் கோசம் அகிம்சையென முழங்கி மக்கள் அமைதிப் பாதைகள் வழங்கி மக்கள் திரளும் சக்தியாய் வடிவெடுத்த பின்னர். கட்டுண்டோம் பொறுத்திருந்தோம் காலம் கைகூடும் நேரமிது என்றுணர்ந்து 'செய் அல்லது செத்துமடி'என்ற முழக்கம் பாமர இந்தியர்களின் செவிப்பறைகள்

திறந்திட ஒலித்தார். எங்கும் எழுந்தது விடுதலை வேட்கை வரலாற்றில் இது ஒரு புதுமை விடியலுக்கான முழக்கம்.

1945 இல் இரண்டாம் உலகப்போர் முடிந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி பெற்று பதவிக்கு வந்தது தொழிற்கட்சி அரசின் தலைமை அமைச்சர் ‘அட்லி’ இந்தியாவிற்கு ஒரு புதிய திட்டத்தை வகுக்க வேண்டும் என கருதினார். 1946 மார்ச் 24 இல் மூவர் குழு ஒன்றை இந்தியா அனுப்பினார் அரசியல் நிர்ணய சபை வேண்டும் என்றும் இடைக்கால அரசை ஏற்படுத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் முஸ்லீம் லீக் தலைவர்களுக்கு தெரிவித்தது.

**பாகிஸ்தான்**

1946 ஜீலை 27 இல் நடந்த முஸ்லீம்லீக் மாநாட்டில் பாகிஸ்தான் அடைவதற்கான நேரடி நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் நோக்கமே முக்கியம் வழிமுறைபற்றித் தமக்குக் கவலை இல்லை என்று ஜின்னா வெளிப்படையாகக் கூறினார். ஜவர்கலால்நேரு தலைமையில் அமைய இருந்த இடைக்கால அரசுக்கு ஒத்துழைப்புத்தர அவர் மறுத்து விட்டார். அகஸ்ட் 6 இல்டந்த நேரடி நடவடிக்கை நாட்டில் இதுவரை இல்லாத அளவில் சாதிக் கலவரம் மூண்டது மாபெரும் கல்கத்தா படுகொலை என வரலாறு வர்ணித்தது.

**மவுண்ட் பேட்டன்**

1947 மார்ச் மாதம் வைஸ்ராய் மவுண்ட் பேட்டன் இந்தியா வந்தார் நேருவோடு நெருங்கிய நட்பு கொண்டார்.ஒன்றுபட்ட பாரதத்தில் ஜின்னாவை அமைச்சரவை அமைக்க கோருமாறும் மறுத்தால் காங்கிரஸ்க்கு கொடுக்குமாறும் மவுண்ட் பேட்டனிடம் காந்தியடிகள் கூறியபோது அவர் வேறுவகையாக சிந்தித்தார். நேருவும் வல்லபாய்பட்டேலும் இதை ஏற்கமாட்டார்கள். என்பதோடு நேருவையும் எதிர்ப்பதற்கு தயார் படுத்தினார் மவுண்பேட்டன்.

ஜின்னா பாகிஸ்தான் பிரியவேண்டும் என்ற தம்முடைய கொள்கையை வலியுறுத்தினார். மவுண்ட் பேட்டனின் புத்தி கூர்மையால் தனக்கு முந்தைய ஆட்சியாளர்களின் எண்ணமாகிய பிரிவினையை தவிர்க்க முடியாததாக்கி சாதகமாக்கிக்கொண்டார்.

**ஆகஸ்ட் 15**

1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் ஆட்சி மாற்றத்துக்குரிய நாளாகக் குறித்தனர். வீம்பு செய்யும் ஜின்னாவால் இந்தியப்பிரிவினையும் பிரபலமானது இனி வழியில்லை பிரிவினைதான் வழியென்னும் முடிவுக்கு வரும் வரை கலவரங்கள், படுகொலைகள். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். இப்போது ஒன்றுபட்ட பாராதத்திற்கு வழியில்லையென உணர்ந்த தலைவர்கள் உடன்பட்டார்கள் காந்தி மட்டும் கதறிப்பார்த்தார். வெற்றிமேல் வெற்றி கொண்டு சாதித்து வந்த காந்திக்கு மகா சறுக்கல் தொடங்கியது.

1947 ஆகஸ்ட் 14 இரவு விடுதலை தேசமெங்கும் முழக்கம் இன்னுயிர் தலைவன் துங்காத இரவு. வாழ்வின் முடிவில்லாத பிரார்த்தனை,போதனை. இந்து முஸ்லீம் கலவரம். இந்து பெண்கள் கட்டாயமாக விவாகம் செய்யப்பட்டனர். கற்பழிக்கப்பட்டனர். கனலில் இடப்பட்டனர்.பதிலுக்கு முஸ்லீம்களை தாக்கத் தொடங்கினர்.பன்னெடுங்காலம் போரிட்டு இழக்காத உயிர்கள் மதவெறித்தீயில் மாண்டன. மனம் புழுங்கினார். தேசவிடுதலை காந்தியை அமைதியுற செய்யவில்லை.ஒருபக்கம் விடுதலை வேள்விவிழா மறுபக்கம் ரத்த வெறியாட்டம்.எங்கே கிட்டும் அமைதி.

**நவகாளி**

நாடுவென்றது சுதந்திரம் கிடைத்தது மக்கள் அமைதியுறாமல் எங்கே மகிழ்வு.தன்னந்தனியனாய் படைகள் பரிவாரங்கள் இல்லை கலவரப்பகுதிகளில் புறப்பட்டார். அமைதிக்குழுக்களை ஏற்படுத்தினார். இந்துக்கள் முஸ்லீம்களை சந்தித்தார். ‘நவகாளி’ என்ற கோரத்துண்டவப்பூமிக்கு பயணமானார். வெறி அடங்கின பிணந்தின்னிகள்

கூப்பாடுகள் குலைந்தன. பிராத்தனைகள், போதனைகள் மக்களை அமைதியுறச்செய்தன.

பழிக்கு பழி புயல் மறைந்திருந்தனவே தவிர ஓய்ந்து போகவில்லை 1948 ஜனவரி 30 பிரார்த்தனைக் கூட்டத்தில் பகைத்துக்கொண்டிருந்த பாதகன் ஒருவன் வைராக்கியம் மனதில் புதைத்து வைத்துக்கொண்டு வணங்கி நின்றான். ஆபத்து என்று அரசு எச்சரித்தும் பாதுகாப்பைப் புறக்கணித்தார் காந்தி.பிரார்த்தனைக்கூட்டத்தில் சாவு நேருமானால் மகிழ்வுடன் ஏற்பேன் என்று பாதுகாப்பை மறுத்தார்.

**மனிதருள் மாணிக்கம் மறைந்தது**

மக்களோடு மக்களாக நுழைந்து மகாத்மா முன் மண்டியிட்டான் கோட்சே.மதவாத பேய்பிடித்து மகாத்மாவை மண்ணுக்கு இரையாக்கத் துணிந்தான். கால்பாதம் தொட்டு வணங்கி எழும்பினான்.சுட்டான்.‘ஹராம்’ என்ற குரல் ‘இவனை மன்னியுங்கள்’ என்று இன்னொரு குரல். இன்னுயிர் எடுத்தவனை மன்னிக்கசொல்லி விட்டு மண்ணோடு சாய்ந்தது மனிதருள் மாணிக்கம். உலகுக்கு அகிம்சை தந்தது.இந்திய இறையாண்மையை தந்தது.போதித்தவைகள் வாழ்ந்த வாழ்க்கை முறைகள் உலகுக்கு ஒரு புதுமை அதைப் புதுப்பித்து புதுப்பித்து மெய்ப்பித்தால் உலகம் உய்யும்.

**முடிவுரை:-**

நாட்டின் விடுதலையை மனித வாழ்வியலோடு மாற்றி பன்னெடுங்காலம் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் மூடபழக்க வழக்கங்களை விடுவித்து கொத்தடிமைச் சமுதயாக் கொடுமைகளை வேரறுத்து சமூகும் கல்வி பொருளாதாரம் முதலியவைகள் முன்னேற்றத்தோடு வன்முறை தவிர்த்து, பகை பாதகம் வளராமல் மனிதயினம் மேன்மைக்காக வாழ்ந்து மடிந்த மகாத்மா மக்களின் மனதில் நின்றால் மனிதயினம் மேன்மையுறும்.

முள்ளஞ்சேரிமு.வேலையன்
முளங்குழிஅஞ்சல்
குமரிமாவட்டம்-629162
9942758333